உ

ஓம் கணபதி துணை.

...தபுரம் ஸமஸ்தானம் திருவுத்தரகோசமங்கையிலிருக்கும்
...ீர. ரெத்தினம்பிள்ளையவர்கள் சகோதரர்
சோதிடம் சபாபதிபிள்ளையாலியற்றிய
தேவையம்பதியெனும்

# இராமீச்சுரத்தலபுராணக்கும்மியும்

ஸ்ரீமாணிக்கவாசக சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய

## சிவஞானபோதமும்

ஷெயூர் அத்தியானப்பட்டர்
ஸ்ரீ மு. முத்துவய்யரவர்களால் ஒருங்குசேர்த்து

...புரம் இலட்சுமி விலாசம் பிரஸில் பதிப்பிக்கப்பெற்றது.
1913

OFFICE OF THE REGISTRAR
REGISTERED
8 JAN 1914
MADRAS.

ஓம் கணபதி துணை.

## விநாயகர் விருத்தம்.

மலர்மகளின் மனமகிழும் மருகனாகி
மஞ்சுமிரும் குஞ்சரத்தின் வதனனாகி
கலன்விளங்குங் கல்மகளின் சேயனாகிக்
காமருறும் பாலமதிப் பெயருமாகி
வலன் உயரும் அறிஞர்களின் வயத்தனாகிம்
மனநிறையும் மணியெனை நீ வாழ்விப்பாயே.

## ஸரஸ்வதி துதி.

(முத்திநெறியென்ற வர்ணமெட்டு)

கலைமகளே யான்கொண்ட கலையதெனுங் கும்மிதனை
அலைகடல்சூழிப்புவியி லாதனெனும் எந்தனுக்குச்

சிலை நுதலு மரிக்கண்ணுஞ் செங்கமல முகைபோலும்
முலையாளே முன்வந்து முற்றிலு நவின்றருள்வாய். (1)
நாமகளென் பெயராளே நான்முகன்றன் றேவியரே
பாமரனாயிருப்பவனுக் கேமமுடன் வந்தருளுன்
தாமமது விளங்கிடவும் தாரணியில் வந்தென்கலைக்
காமமதைத் தீர்த்தென்முன் முற்றிலு நவின்றருள்வாய் (2)
விண்ணவரும் விசாரதரும் விஞ்சையர் ஊர் உற்றவரும்
மண்ணவரும் மாதவரும் மாஞானியானவரும்
வண்ணமரும் வணிகர்களும் வழுவாது பணிகழலில்
எண்ணமுறும் எனக்குன்கலை யியாவையும நவின்றருள்வாய். (3)

---

உ

# ஸ்ரீ திரு இராமீச்சுரச் சேதுபுராணத் தெரிசனைக்கும்மி.

விநாயகர் துதி.

## கும்மி.

செந்திருமாமகள் மேவிடும்சேதுவின் சீர்த்தியைக்கும்மிதமிழ்பாட
பைந்தருச்சோலைசூழ் உப்பூர்வளர்ந்திடும் பாலகணபதிதாடுணையே (1)

வாவிவளந்திகழ் தேவைப்பதியினில் மன்னும்புகழைக்கும்மிப்பாட
தேவிநகரினில் மேவுநவக்கிரகச் சேவடியைத்துதிசெய்வாமே (2)

எத்திசையோர்களும் பத்தியொடுநித்தம் வத்திடுஞ்சேதுக்கும்மிப்பாட
தத்தியணிந்திடு மத்தனருளிய சத்திக்கணேசன் சரண்டுணையே (3)

காலன்பயத்தைத யகற்றிடுஞ்சேதுவின் காக்ஷியைக்கும்மித்தமிழ்ப்பாட
சீலமிகுந்திடும் மேலவாயில்வாழும் வேலவனின்பாதம்வேண்டிடுவோம் (4)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
6 JAN 1914
MADRAS.

தேவைப்பதியின் புகழைக்கும்மியெனச் செந்தமிழாற்சிறுவன்புகல்
மாவைக்கரத்தினி லேந்துராமீச்சுரன் மாமலர்ப்பாதம்மனம்பதிப்பாம் (5)

அம்பொன்னவர்துதி தேவைக்கும்மித்தமிழ் அன்புடன்பார்மீதினிலுரைக்க
செம்பொன்வரைத்தனப் பர்வதவர்த்தனி சேவடியென்னாளுங்காப்பாமே (6)

ஓதுமாதவர் மறையோர்துதித்திடும் உத்தமச்சேதுக்கும்மிப்பாட
சேதுமாதவனின் செய்யபொற்றாளினை சிந்தையில்வந்தனைசெய்திடுவாம் (7)

சித்தியைப்பெற்றிட முத்தலத்தோர்களுந் தேடிடுஞ்சேதுக்கும்மியுரைக்க
நத்தணியுங்கரநத்தனுங்கேசவ னாயகிபூமகடாடுணையே (8)

வெண்டிரைமுத்தங் கொழித்திடுஞ்சேதுவின் மேவுட்புகழைக்கும்மியிசைக்க
வண்டணியுங்குழ லுத்தமிவாணியின் வண்ணமலர்க்கழலைத்தொழுவாம் (9)

ஓதும்வரங்க ளெப்போதுங்கொடுத்தரு ளோங்கிடுந்தேவைக்கும்மியுரைக்க
சேதுமாகாளியின்செங்கமலப்பதஞ் சித்தத்தில்வைத்துநித்தம்துதிப்பாம் (10)

மங்கையரேயிங்கு வாருங்கடிசேது மாநகர்க்காக்ஷியைப்பாருங்கடி
திங்களணிந்திடுஞ் சங்கரனைப்பணி தெய்வமறையவர்வீதியினில் . (11)
நித்தியம்யாகந்தொடுப்பாராம் யாரும் நேர்ந்தவரங்கள்கொடுப்பாராம்
பத்தியாயத்தனைப்போற்றுவராம்பாச பந்தவினைகளைநீற்றுவராம் (12)
காராளர்வீதியொருபுறமாம் நற்கனவணிகரில் லொருபுறமாம்
தாரளமாயின்பந் தன்னைநல்குந்திருத் தாசிகள்வீதியொருபுறமாம் (13)
ஓவியர்வீதியொருபுறமாம் வானமோங்குங்கடைக ளிருபுறமாம்
தாவித்தனுக்கோடி போகவாருமெனச்சாற்றும் ரயில்ஸ்டேஷன்பாருங்கடி.
நங்கையரேகோவில் வாருங்கடி ராமநாதன்புகழ்க்குமி கூறுங்கடி
பங்கயமாறுதியித்தலமான்மியம் பாவையரே சொல்வேன் கேளுங்கடி (15)
தென்னிலங்கையர சாண்டவனும்தெச கண்டனெனப்பெயர்பூண்டவனும்
மன்னுங்குசத்துவச மாமுனிபெற்ற மாதுவேதவதியென்பவளை (16)

முன்னாளிற்செய்த கன்மவினையேவந்து மூண்டதாலந்த மங்கைதனையே
நன்னியபாக அணைந்திடஎண்ணி நாடிமொழிந்தனன்கூடிடவே (17)

ராவணனிவ்வுரைகூறிடவும் அந்தநங்கையர்க்குச்சினம் மீறிடவும்
ஆவணமோடுநீ பெற்றமகளையே அணைநதிடவெண்ணக்கடவையென்றும் (18)

அந்த மங்கையினாலுன்சீரும்நீயு மாண்டிடுலங்கையெனும்பேரும்
நந்தவெனச்சாபமிட்டுவேதவதி நாடிமறைந்தாள் கனலூடே (19)

ராவணன்மாரனினம்பாலே மனன்னொந்து வண்டோதரியின் பாலே
ஆவலுடனேயணைந்ததாலம்மங்கை அன்புடனீன்றாளோர் மின்னணங்கை

சிந்தையில்லங்கை மன்னன்களித்து அதிசீக்கிரஞ்சோதிடரையழைத்து
அந்தமதாய்ப்பெற்றகுழந்தைவிசேடத்தை அன்புடன்சொல்லுமென
வுரைத்தான் (21)

சோதிடர்துன்னிமித்தம்புகல லங்கைத்தோன்றல் குழந்தைதனையகல
சோதிடரானதால் வாரியிலிப்போது கொண்டெறியுமெனக் கூறினனே (22)

வண்டோதரியிம்மொழிகேட்டு அந்த மங்கையைப்பேழையினிற்போட்டு
கண்டுமொழிநிகர்க் காரிகைதன்னிடம் கைதனிலேகொடுத்தேகினளே (23)

வாங்கியத்தூதன்கையிலெடுத்து ஆழ வாரிதியிற்கொண்டுபோய்விடுத்து
ஏங்கியிருந்திடும்ராவணன்முன்பாக ஏகிமொழிந்தானத்தூதனுமே (24)

முக்கண்பரமனருளாலேயலை மோதிமிதுலைக்கரைமேலே
அக்கன்னிபபேழையொதிங்கிடவும் அங்கருகிற்ப்பழனம்பதிந்திடவும் (25)

சனகன்வருதிப்படியுழவும் அந்தச்சாலிலிருந்து பேழையெழவும்
பனகமணியாழிக்கையாலெடுத்ததைப் பார்த்துமகிழ்ந்தனன்பார்த்திபனே.

சிந்தைமகிழ்ந்தேயெடுத்தனரும் யில்லில்ச்சென்றுதேவிபாற்கொடுத்தனரும்
விந்தையாயம்மாதுவந்தமகவினை வேண்டியிருகையால் வாங்கினளே (27)

செல்விமுலைப்பாலையூட்டினளாம் திகழ் சீதையெனும்பெயர்சூட்டினளாம்
கல்விமுழுவதுங்கற்றனளாம் பின்னர் கன்னிப்பருவமுமுற்றனளாம் (28)
அய்யோத்தியாண்டதசரதனுமவன் அன்புடனீன்ற திருமகனும்
வையம்புகழரி ராமனும்சீதையை வந்துமணமுடித்தேகினனே (29)
மாமணஞ்செய்துமகிழ்ச்சியுடனிந்த மானிலமெங்கும்புகழ்ச்சியுடன்
காமணஞ்சூழுமயோத்திநகரினிற் காக்ஷியாய்வாழ்ந்திடும்போதினிலே (30)
அன்னுளமருரைப்படியே ராமனன்னை கைகேயிவரப்படியே
நன்னயமானவிலட்சுமணனொடு நங்கையாசீதையுடன்கூடி (31)
போதுலவும்வனம்புக்கினராம் வந்த பொன்மானினைக்கண்டு சொக்கினராம்
மாதுசீதாதேவிசொற்படியேமன்னர் மானைத்துடர்ந்து பின்னேகினரே (32)
மான்பின்னிருவருஞ்சென்றிடவும் ராமன்வாய்ந்த கணையினாற்கொன்றிடவும்
தேன்மொழிசீதையை ராவணனுங்கொண்டு தென்னிலங்கைதனக்கேகினனே.

வேதவதியின்ச்சாபமதால்லங்கை வேந்தனுக்குப்போகத்தாபமதால்
மாதர்க்கரசியாஞ்சீதையைச்சேர்ந்திட வஞ்சகமாய்ச்சிறைவைத்தனனே (34)
சென்றவிருவரும்வந்திடவே மாது சீதையைக்காணாது நொந்திடவே
அன்றுமொழிந்தசடாயுவின்சொற்படி அன்புடனே லங்கைக்கேகுதற்கு(35)
வாரியணைகட்டிச்சென்றனனும் லங்கை வாழ்ராவணன்றனைக்கொன்றனனும்
காரிருட்கூந்தலாள் ஜானகிதன்னொடு காதலாய்ச்சேதுவழிநோக்கி ... (36
ராமனும்அங்குவந்துற்றிடவே கொன்றராவணனின்றோஷம்பற்றிடவே
தர்ம்மகுணசீலராமன்சிவபூஜை தன்னைச்செய்துதோஷம் போக்கினராம்(37)
இந்தவிதம்மற்றச்சேனைகளும்ரகு ராமனுடன்வந்ததானைகளும்
சுந்தரமாய்ப்பூஜை செய்தனராம் வானிற் றோன்றமரர்மலர்பெய்தனராம்(38)
சீதாராமனுஞ்சிந்தைமகிழ்ந்திந்தச் சேதுத்தலத்தைமிகப்புகழ்ந்து
தீதானகற்றிடச்செய்திடுமித்தலத் தீர்த்தமுமூர்த்தியுமென்றுரைத்தார் (39)

ஆணையால்க்ஷேத்திரந்தனைத்தேடி அங்கமர்ந்திடுங்கங்கையெலாமாடி
வேகமுடன்ராமலிங்கத்தைக்கும்பிட்டு வேண்டிக்கும்மியடியுங்கடி (40)

## தீர்த்தங்களின் பெயர்கள்.

சக்கரதீர்த்தம் வேதாளதீர்த்தம்புவிச் சன்மபாபவிநாசதீர்த்தம்
திக்குப்புகழ்சீதாதேவிகுண்டமொடு சிந்தைமகிழ்மங்கலதீர்த்தம் (41)
அமுதவாபிதீர்த்தம் அங்கதீர்த்தமகத்தியதீர்த்தமனுமகுண்டம்
குமுதமிகுராமலட்சுமணதீர்த்தம் கொங்கலர்ந்தோங்குஜடதீர்த்தம் (42)
லட்சுமிதீர்த்தமக்கினிதீர்த்தம் விண்ணர் நாடித்துதிச்சக்கரதீர்த்தம்
நச்சணிகண்டச்சிவதீர்த்தமிக நற்சங்கதீர்த்தங்கயாதீர்த்தம் (43)
கங்கையமுனையுங்கோடிதீர்த்தம்நற் கருணைசேர்சாத்யாமுததீர்த்தம்
பங்கமிலாதசருவதீர்த்தமொடு பாவந்தீர்க்குந்தனுக்கோடிதீர்த்தம் (44)

பத்தூராடுமிருபத்துநான்கு தீர்த்தம் பார்புகழிச்சேதுதன்னிலுண்டாம்
சித்தியளித்திடுஞ்சக்கரதீர்த்தத்தின் சேதியைக்கேளுங்கள்மாதர்களே (45)
தர்மதேவதைவிதூமனலம்புசை தார்புகழ்காலவமாமுனியும்
கர்மமதுதீரவிப்புனலின்முழ்கிக் காக்ஷிபெற்றுக்கதியெய்தினரே (46)
முன்னாளமரர்க்கிடுக்கணிழைத்திட்ட மூர்க்கமகுடாசூரன்றனையே
சின்னாபின்னமாகச்சேதித்திடவெண்ணிச்சிந்தையோர்ந்துபரமேச்வரனும் (47
கோபமுடனேமதித்திடலும்காளிகோரரூபியாயுதித்திடலும்
பாபம்மிகுந்தமகுடாசூரன்றனைப் பற்றியேபின்னுற்றுடந்தனளாம் (48)
அம்மைவருங்கோபந்தன்னைக்கண்டு வெகுவாத்திரத்தோடுமனம்பயந்து
செம்மையதாகவிளங்கிடுஞ்சக்கர தீர்த்தத்தினுள்ளேமறைந்தனனும் (49)
வீரமகுடன்மறைந்திடவேமதிவேணியுமையுந்தன்னூர்தியெனும்
கோரமிகுந்திடுங்கோளரியாற்கண்டுகொன்றுகளித்தங்குநின்றனளே (50)

அன்புடன்சக்கரதீர்த்தத்திலே விண்ணமரர்கள்கங்கைதனைநிரப்பி
இன்புடனெல்லோருமப்புனலாடி யெழுந்துதேவிபதமேத்தினரே (51)
பத்தியுடனிந்தத்தீர்த்தத்திலேமூழ்கி பத்திரகாளிபதமலரை
சித்தத்தில்வைத்துதினந்துதிப்போர்பகை தீருமெனத்தேவர்செப்பினரே (52)
ஆனதினாலிதில்மங்கையரேநாமு மாடிடுவோமடிநங்கையரே
தேனமர்மாமலர்சேந்திடும்வேதாள தீர்த்தச்சிறப்பினைக்கேளுங்கடி (53)

## வேதாள தீர்த்தம்

காலவமாமுனிபுத்திரியானதோர் காந்திமதியெனுங்காரிகையை
சீலமிகுந்தசுதரிசனனென்பவன் சேரப்பலாத்காரஞ்செய்ததினால் (54)
அம்முனிவன்சாபம்பெற்றனனும் அவனாகம் வேதாளம்போலுற்றனனும்
செம்மைசேருமிந்தத்தீர்த்தத்தில்மூழ்கிச்சேர்ந்தவந்தரூபம்மாற்றினனும் (55)

பாதாளமும்விண்ணேடந்தரமுமிந்தப் பாருலகுள்ளோர்தினம்போற்றும்
வேதாளதீர்த்தமெனத்திருனமமு மேதினிதன்னிலுண்டானதுவே. (56)

இத்தீர்த்தத்திலெவராடிடினுமவர்க் கேய்ந்தபசாசத்துயரமற்றே
முத்தியைப்பெற்றென்றும்வாழ்ந்திடுவாரென முன்னாள்மொழிந்தார்மறை
யோர்கள் (57)

## பாபநாசதீர்த்தம்.

வேதியன்வேள்வியின்மந்திரத்தைமுன்னாள் வேண்டுந்திடமதியென்றுார்ந்த
மேதினிதன்னிலோர்சூத்திரர்க்குமிதை விண்டசுமதிப்பிராமணர்க்கும் (58)

பாவமதினாலிருவர்களுமிந்தப் பாரிற்பசாசுங்கழுவதுமாய்த்
தாவமுடனேயலைந்திடுங்காலை தவத்திற்சிறந்தவகத்தியனும் (59)

உத்தரவின்படியிப்புனலின்மூழ்கி ஊழ்வினைப்பாவந்தனைத்துலைத்தார்
இத்தகையாலிதைஎத்தலத்தோர்களு மேத்திப்பாவநாசமென்றுரைப்பார் 60

## சீதாகுண்டம்.

சீதையின்கற்புநிலையறியவெண்ணி ஸ்ரீ-ரகுராமனுமக்கினியில்
சோதனையாகமுழுகியெழுவெனச் சொல்லியதாலம்மொழிப்படியே (61)
அம்மையுஞ்செந்தழலைவளர்த்து அரிராமன்பதத்தைமனம்பதித்து
செம்மையதாகமுழுகிடவுங்கனல் செந்தாமரைப்புனலானதுவே (62)
ஜானகியுமிதில்மூழ்கியதாலிதைச் சார்ந்த சீதாகுண்டமென்றுரைப்பார்
வானவர்தங்கட்கிடுக்கமதுசெய்த வல்லகபாலவூணன்றனையே (63)
ஆகண்டலன்வெட்டிக்கொன்றதினு லவன்றன்னைத்தோஷம்பற்றிநின்றதினுல்
வேகமதாய்மலர்வேதியன்சொற்படி வேண்டியிக்குளத்திலாடினனே (64)

## மங்கலதீர்த்தம்.

செல்வச்சயந்தவனமெனுமானகர்ச் செம்மல்மனோஜவுராஜனென்பான்
பல்வினையாற்றன்னரசுப்பதியைப் பகைத்தகோவலன்றனக்களித்து (65)

வார்ந்திகுழலாள்மனைவியோடு மீளமைந்தனைக்கூட்டிவனம்போந்து
சோர்ந்துமயங்கிவிழுந்திடவேயங்கு தோன்றிப்பராசமுனீச்வரரும். (66)

வந்திடவேமனையாளுடன்மைந்தனும் மலரடிபோற்றிமிகவணங்கி
சுந்தரமாமுனிதன்னிடம்தங்களின் தொந்தரையாவும்புகன்றிடவே (67)

அந்தமுனிவன்மொழிப்படியேபதி லன்புடன்மூழ்கிமனப்படியே
விந்தைமறையவர்தங்களுக்குமிக வேண்டிப்பரிசுங்கொடுத்திடவே (68)

தேருங்கரியும்பரியுடனே இன்னுஞ் சேர்ந்தபணிமணியாயுதமும்
ஏருஞ்சிவிகைபோடேல்லாப்படைகளும் யேந்தலுக்கங்குவந்துற்றிடவே (69)

கோவலனோடெதிர்த்தானும் அவன்கொண்டதலத்தைப்பறித்தானும்
காவலனானமனோஜவராஜனும் காக்ஷியுடன்புவிவாழ்ந்தனனே (70)

மங்கலம்யாவும்கொடுத்ததினாலதை மங்கலதீர்த்தமெனப்புவியோர்
பொங்கமுடனேயுரைப்பார்களிதைப் போற்றிக்கும்மியடியுங்கடி (71)

## அமுதவாபி தீர்த்தம்

நீர்ணிலம்போற்றிடும்கும்பமுனிக்கிளை நாரணனுமகரிஷியும்
மேணிலமானசுவர்க்கமதைநாடி மேருவருகிற்றவம்புரிந்தும் (72)

முத்தியைக்காணுதுசித்தமிகவாட முக்கண் விமலன் மொழிப்படியே
அத்தருணந்தனினித்தடம்முழ்க மேலானவமுதமடைந்தனனே (73)

முத்தியமுதங்கொடுத்ததினாலிதை முன்னாளமுதவாவியெனவே
இத்தரையோர்போற்றும்மேகாந்தமீச்சுரத் தெல்லையிலிப்புனலுள்ளதுவே (74

## பிர்ம்மகுண்டம்.

பங்கயன்செந்தணலானமலைமுடி பார்த்தேனென்றபிற்மன்பாவமற
அங்கையர்க்கண்ணுமைபார்வதி பாகனருளின்பிரகாரமிங்குவந்து. (75)

செய்திடுயாகமெலாமுடித்துவந்த தேவர்கட்காகுதிதான்கொடுத்து
கொய்தகபாலேசுரன்பதம்போற்றிய சூறியநன்வரம்பெற்றனனே (76)

பிரமனும்யாகம்வளர்த்த தினுலிதை பிர்மகுண்டமெனப்பேசிடுவார்
கர்மவினைகளைப்போக்கிடுமா மிதிற்காகூஷிமிகவுண்டாங்காரிகையே (77)

## அனுமகுண்ட தீர்த்தம்

ராவணனைக்கொன்றபாவமகற்றிட ராமன்சிவலிங்கம்பூஜைசெய்ய
ஆவலுடனேநருமதாலிங்கத்தை ஆஞ்சநேயாகொண்டுவாவெனவே (78)
சீதாமனேகரன்செப்புமொழிப்படி சென்றவனுமான்வருமுனமே
தோதானவேளையுமுற்றிடவேயங்கு தோகைசீதாதேவியுந்தெரிந்து (79)
பார்த்தீபலிங்கம்பிடித்திடவே பூஜைபக்தியாய்இராமன்முடித்திடவே
வேர்த்தனுமான்சென்றுலிங்கமதைக்கொண்டுவேண்டியவர்முன்புவைத்தனரே.
சென்றுவருமுனம்பூஜைமுடித்ததைச் சித்தமதிலனுமான்வருந்த
வென்றிபெற்றரகுராமனும்பார்த்ததைவேறேரிடத்தில்வைப்போமெனவே (81)
கூறிடுமம்மொழிகேட்டவனுமானும் கூடாதென்றவ்வுரையைமறுத்து
சீறிடவேராமன்முன்வைத்தலிங்கத்தை சித்தம்போலநீபெயர்ப்பாயென (82)

செப்பியவார்த்தையைக்கேட்டவனுமானுந் தீரமொடுவிஸ்வரூபமுடன்
முப்புரத்தைவென்றருத்திரனைப்போல மூர்க்கமொடுராமலிங்கமதை (83)

மாருதியுங்கோபமுற்றிடவே நெடுவாலாலிலிங்கத்தைசுற்றிடவே
வாரிதிபோலக்குரிதிபெரிகிட வாலருந்தப்பால்விழுந்திடவும் (84)

சித்தம்மயங்கிமூர்ச்சித்திடவே இராமன்சீதையுஞ்சோகமகற்றிடவே
வித்தகனானவனுமான்விழுந்த விடத்தையனுமகுண்டமெனவே (85)

தீர்த்தமுண்டாக்கிப்புகழ்ந்தனராம் அதில்தேவர்களாடிமகிழ்ந்தனராம்
கீர்த்தியுள்ளரகுராமனும்மாருதி கேட்டவரங்களளித்தனராம் (86)

## அகத்தியதீர்த்தம்

திங்கள்சடையன்மலைமகளை மணஞ்செய்திடும்போதிலகத்தியனை
பொங்கமுடன்விந்தமாமலைக்கெர்வத்தைப் போக்கிவாவெனப்புகன்றிடவே ()

செய்யுமணக்கோலகாக்ஷியைக்காணாது செல்லேனெனக்கும்பன்செப்பிடவும்
துய்யவேதாரண்யமென்னுந்தலத்தினிற் றோன்றியிக்காக்ஷிதருவமென்றே (88)

பார்வதிபாகன்பகர்ந்திடவே மிகப்பக்தியாய்நின் றுபணிந்திடவே
சீர்வதியுங்கும்பன்விந்தைக்கொர்வம்போக்கிசேதுதலத்தினில்வந்தடைந்து (89)

செங்கமலப்புனலுண்டுபண்ணி நல்லசேதுராமலிங்கம்பூஜைநண்ணி
துங்கமுடனேவரம்பலநல்கி நற்றாயமுனிவனுமேகினனே (90)

அன்றுமுதற்கந்தமாதனத்திலிதை யன்பாயகத்தியதீர்த்தமென
என்றும்புவியுளோரிப்புனலிலாடியெண்ணும் வரங்களைப்பெற்றனரே (91)

## ஸ்ரீராமதீர்த்தம்

ராமன்சிவலிங்கம்பூஜைசெய்து சேதுநன்னகரார்மதையுண்டுபண்ணி
சேமமதைப்பெறச்சேனையோ டெல்லோரும் சென்றார்குளிர்ந்தபுனலாடி (92)

வேண்டும்வரங்களையீந்தரிராமனும் வேகமோடய்யோத்திமாநகர்க்கு
தாண்டும்பரிகரிச்சேனையோடெல்லோரும் சந்தோஷமாகவேசென்றனரே (93)
ராமனா லுண்டானதீர்த்தமதாலதை ராமதீர்த்தமெனவேபுவியோர்
நாமமதனைப்புகன்று தினந்தினம் நங்கையேமூழ்குவார்பாருங்கடி (94)

### லெட்சுமண தீர்த்தம்.

இந்திரசித்தனைக்கொன்றபவன்னீங்க னண்ணிலட்சுமணன்லிங்கமஞ்சு
சுந்தரமாய்ப்பூஜைசெய்துதன்பேரினாற் றோன்றிடத்தீர்த்தமுண்டாக்கினராம்

### ஜடாதீர்த்தம்.

ராட்சதர்தங்கள்குருதியகற்றிட ராமலட்சுமணாள்ஸ்தானஞ்செய்ய
மாட்சியுடன்தடமாக்கியதாலிதை மானிலத்தோர்ஜடாதீர்த்தமென்பார் (96)

### இலட்சுமிதீர்த்தம்

செந்திருமாமகள்மாதவனைவிட்டு சின்னாட்பிரிந்தவள்சேருதற்கு
கந்தமாதனபருவதத்தில்வந்து காமதக்னன்றனை துதித்து (97)

பார்புகழ்தீர்த்தமொன்றுண்டாக்கி யதிற் பத்மாஸனியும்புனலாடி
சீர்வளர்மாலினைச்சேர்ந்ததாலட்சுமி தீர்த்தமெனப்பெயரானதுவே (98)

## அக்கினி தீர்த்தம்.

சென்னிராமன் றோரக்கினி தேவனுஞ்சென்றுமகோததியிற்படிந்து
நன்னயமாய்ரகுராமன் பதத்தினை நாடித்துதிசெய்யும் போதினிலே (99)
அக்கினிதேவன்றனைப்பார்த்து நீயுமாடிய கங்கைக்குன்பேர்கொடுத்தோம்
முக்கியமாயதில் மூழ்குவோர்தங்களின் முப்பிறப்பின் வினையுந்தீர்ந்து (100)
புத்திரர்மித்திரரோடுபுவியினிற் போகங்களெல்லாமடைந்திடுவார்
எத்திசையோர்களும்போற்றிடவே யுனக்கெல்லாவரமீந்தோமென்றனரே

## சக்கர தீர்த்தம்

முன்னுளகிர்ப்புத்தனென்றோர்மாமுனி மோட்சம்பெறத்தவஞ்செய்திடவே
பன்னகப்பாயனைப்போற்றித்தனக்கொரு பாதகம்வராதுகார்த்திடென்றான்

அந்தமுனிக்கொருபாதகம்னேராமல் அன்புடன்சக்கரத்தை க்கொடுக்க
சொந்தமாச்சக்கரங்கார்க்கத்தவஞ்செய்துஜோதிமயத்திற் கலந்தனனே (103)

சக்கரமிப்புனல்சார்ந்ததினலிதை சக்கரதீர்த்தமெனப்புவியோர்
அக்கரவம்புனைராமீசனைப்புகழ்ந்தாடிடுவார் வினைசாடிடுவார் (104)

## சிவ தீர்த்தம்

தென்பொதிகைவளர் மாமுனியுந் தவஞ்சேர்ந்த வகலிகைநாயகனும்
முன்பொருநாளினிலிப்பதியில்வாழு முக்கணனைப்பூஜைசெய்திடவே (105)

ஈசனுஞ்சிந்தைமிகக்களித்து அவரிஷ்டசித்திக்கோர்புனலளித்து
தாசர்க்கருளுஞ்சிவனுங்கொடுததால்தாரணியிற்சிவதீர்த்தமென்பார் (106)

இஷ்டசித்திகளையெல்லாங்கொடுத்திட யீசனுமிப்புனலீந்ததினல்
அஷ்டசித்திகளுநன்னுடிடு மாமிதிலாடிடுவோர் வினையோடிடுமாம் (107)

## சங்க தீர்த்தம்

கங்கைமதிகொன்றைதும்பையணிந்திடும் கண்ணுதற்பெம்மான்றிருவருள்சேர்
சங்கமுனியுமுண்டாக்கியதாலிதை சங்கதீர்த்தமெனவேபுகல்வார் • (108)

## கங்கை யமுனை கயை.

கான்முடமானவிரைக்குவமாமுனி கங்கையமுனை கயைமூழ்க
மான்மழுவேந்தும்மகேசன்றிருவருள் மன்னியமாதவத்திற்சிறந்தோன் (109)
சித்தத்திலெண்ணித்தினந்தினமுமிகச் சிந்தித்தோர்காலாற்றவமியற்ற
முத்திக்குவித்தானமூன்றுநதிகளும் மோதமலர்க்குழல்மாதர்களாய் (110)
அம்முனிவனெதிர்நண்ணிடவுமவ ரன்புடன்வந்தனம்பண்ணிடவும்
கொம்மமுலையினுள்மூவருங்கங்கையாய் கூடிப்பெருகிமறைந்திடவும் (111)
வேதவிரைக்குவமாமுனியுமதில் விந்தையாய் மூழ்கிகளித்ததினால்
பூதலங்கங்கையமுனைகயாவெனப் போற்றிடுமாம்பவன்னீற்றிடுமாம (112)

## கோடிதீர்த்தம்.

லங்கைக்கரசனைக்கொன்றபவந்தீர ராமன்லிங்கம்பூசைசெய்திடுநாள்
கங்கையையங்குவரவழைக்கவெண்ணி கைதனிலுள்ளவிற்கோடியினால் (113)
பார்மீதினில்ராமனூன்றிடவேயங்கு பாதாளகங்கையும்தோன்றிடவே
சீர்மிகமேவிடும்ராமீசுரன்றன் சிரத்திலபிஷேகம்செய்தனராம் (114)
கோதண்டக்கோடியினால்வருவித்ததால் கோடிதீர்த்தமெனவேயுரைப்பார்
வேதண்டத்தீசனருள்மிகநாடிடும் வேண்டிவந்திப்புனலாடுவர்க்கே (115)

## சாத்தியாமுத தீர்த்தம்.

வானவரின்பதிசெல்லுதற்கெண்ணியே வள்ளல்புரூருவனித்தலத்தில்
தேனமுதமெனுமிப்புனலாடித் தேவருலகினுக்கேகினனே (116)
மன்னன்புரூருவனித்தடமாடிட மாக்ஷியாஞ்சாத்தியமெய்ததினால்
இன்னிலத்திலுள்ளோர்யாவருமேயிதை என்றுஞ்சாத்தியாமுத தீர்த்தமென்
பார்.

## ஸர்வ தீர்த்தம்

அந்தகனுனசுதரிசனன்புவி யார்ந்ததீர்த்தமெலாமாடுதற்கு
இந்தையிலெண்ணிஸ்ரீராமனுதன் றிருச்சேவடியைத்துதிசெய்திடவே (118)

பத்தர்க்கருள்செயுநித்தன்விடையேறிப் பக்ஷமாயந்தகமாமுனிமுன்
சித்திகொடுத்துவிழியுந்தெரிந்திட செய்துமுன்வந்தவ்விடத்தினிலே (119)

தாரணியிலுளபுண்யநதிகளைத் தானழைப்பாயெனத்தன்விடைக்கு
நாரணிபாகன்னவின்றமொழிப்படி நந்தியுந்தன்காலதார்புவியை (120)

சீக்கிரமாயங்குதோண்டிடவேசர்வ தீர்த்தங்களும்வந்துவேண்டிடவே
சாக்கிரமாமுனியாடியதாலிதை சர்வதீர்த்தமெனப்பேருளதாம் (121)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
6 JAN 1914
MADRAS.

## ஸ்ரீராமதனுஷ்கோடி தீர்த்தம்

ராவணன்றம்பிவிபீஷணன்சொற்படி ராமன்றனுக்கோடியாலணையை
மாவலிமையோடுகீறியதாலிதை மானிலத்தோர்தனுக்கோடியென்பார் (122)

இத்தனுக்கோடியிலாடிடினுமிதை யாவர்விழியினானாடிடினும்
முத்திசித்தியும்பெருவாரெனராம மூர்த்திமொழிந்தனர்ஜானகிக்கே (123)

## இரணவிமோசன தீர்த்தம்

மாதவமாமுனிவர்கடனும் உயர்வானரந்தணர்பிதிர்க்கடனும்
பூதலத்தோர்களகற்றிடவேயிதைப் பொற்புடன்செய்தாராமீசனுமே (124)

இப்புனலிலெவராடிடினுமவர்க் கேற்றரணத்தையகற்றுதலால்
இப்பிதவமுமிரணவிமோசன மேகாந்தராமீச்சுரமுளதாம் (125)

## பஞ்ச பாண்டவ தீர்த்தம்

பாண்டவரைவரும்ராஜசூயாகம் பாரிலியற்றிடுனாளதனில்
வேண்டிவந்தித்தலந்தன்னிலிலங்கிடும் வித்தகனாராமீச்சுரனே (126)

சிந்தித்தைந்துபுனலாக்கினராம்தங்கள் சிந்தைத்துயரெல்லாம்போக்கினராம்
வந்தித்துப்பாண்டவதீர்த்தமென்றெல்லோரும்வாழ்த்துவாராம்புகழ்ந்தேத்து
வராம்.

## தேவ தீர்த்தம்

தேவர்மகிசுரயாகம்புரிந்திடச் சிந்தையிலெண்ணித்தேவைப்பதியில்
ஆவலுடன்தேவதீர்த்தமெனப்பெய ரன்பாயளித்ததிலாடினரே (128)

## சுக்ரீவ தீர்த்தம்.

வானரவேந்தனானசுக்ரீவனும் வந்துராமலிங்கம்சேவைசெய்து
வானவர்போற்றத்தன்னாமமதார்புனல் வண்ணமுடனென்றமைத்தனனே ()

(அங்கதன் நளன் நீலன் நெவன் கெவாக்ஷன் கந்தமாதனன் தீர்த்தம்)

சேனாபதியாம்நளனெடுநீலனும் சேர்ந்தபசுக்கண்ணங்கதனும்
வானுடலர்துதிவல்லவிபீஷணன் மன்னவன்மந்திரிநால்வருடன் (130)

தங்கள்பேராற்றீர்த்தம்பண்ணினராம் சேது தர்ப்பரன்பாதத்தைநண்ணின
ராம்.
மங்களமும்பலதந்திடுமாமிதில் மங்கையேமூழ்குவோம்வாருங்கடி (131)

## பிரமஹத்தி விமோசனம்.

ராமன்லிங்கம்தைப்பூஜைபண்ண லங்கை ராவணனத்தியுந்தான்விலகி
மாமலைபோலப்பின்செல்லுவதைக்கண்ட மாதவன்பூமிதனிலிருத்தி (132)
காலபயிரவன்றன்னையேயவ்விடங் காவலனாகவேவைத்துமிந்த
ஞாலமதுபுகழோங்கிடும்ராமனும் நன்னயமாய்ப்புனலொன்றுசெய்து (133)
பிர்ம்மகத்திதோஷம்போக்கியதாலதின் பேரும்பிர்ம்மகத்திமோசனமாம்
கர்மவினையாவும்போக்கிடுமாமிதின் காக்ஷிமிகவுண்டாங்காரிகையே • (134)

## கபிதீர்த்தம்.

தேசந்துதிசெயும்ராமனின்வானரச் சேனைராமலிங்கம்பாதமதை
வாசமலர்கொண்டு பூஜைசெய்தவர் வந்துபடிந்ததினாலிதனை (135)

தேவர்களும்புவிமானவருந்திகழ் சித்தர்களுமிதிலாடிடுவர்
பாவங்கள்தீர்த்திடுமாமித்னேயிந்தப் பாம்பன்மேவுங்கபிதீர்த்தமென்பார் ()

## பைரவ தீர்த்தம்

மாலயன்போற்றிடுஞ்சேதுராமலிங்கம் மாமலர்ப்பாதந்தனைத்துதித்து
காலபயிரவன்றன்பெயரார்ச்செய்த காக்ஷிதருந்தீர்த்தம்பாருங்கடி (137)

## காயத்திரி சாவித்திரி சரஸ்வதி தீர்த்தம்

ஆரணன்றன்ஞர்படைத்ததோர் மங்கையையாசையுடன்றுனணையவென்றே
பூரணமாகநினைந்தழைக்கவந்தப் பூவைமறுத்தோர்பெண்மான்வடிவாய் (138)

ஓடிடவேகண்டசெங்கமலத்தய ஞேங்குங்கலையதாய்ப்பின்றுடர
நாடியயனுயிர்வாங்கிடவேவிடை நாதன்சிலைக்கணையெய்தனனே (139)

பூவையன்றன்னுயிர்வாங்கிடவே அவர் பூவையராமூவரேங்கிடவே
தேவர்துதிக்குமரனுருரைப்படி சேதுராமீசனைச்சிந்தைவைத்தே (140)

மும்மங்கையுந்தீர்த்தஞ்செய்தனராம்சேது மூர்த்திபதம்போற்றியுய்தனராம்
செம்மலரோனுயிர்பெற்றிடவீசனும் சிந்தைகளித்தருளீந்தனனே (141)
காயித்திரியோடுசாவித்திரிமிகக் காசினிபோற்றுஞ்சரஸ்வதியும்
நேயத்தோடிப்புனலாடியதாலவர் நேர்ந்தவன்னுமமும்வாய்ந்ததுவே (142)

தீர்த்தமகிமை முற்றிற்று.

## மூர்த்திகளின் மகிமையாவன.

அசுவத்தாமனுமுன்பாரதயுத்தத்தில் ஆனபதினெட்டான்னுளிரவில்
விஸ்வரூபமொடுபாண்டவர்மைந்தரை வெட்டிமடித்ததின்பாவமதால் (143)
சேர்ந்தசிசுவத்திபற்றிடவே இந்தச்சேதுதலத்தினிலுற்றிடவே
வார்ந்தகங்கைச்சடைராமீசனைப்போற்றி வந்தப்பவத்தைத்துலைத்தனராம் ()

திங்கட்குலத்துத்தருமகுத்தன்வேட்டஞ் சென்றுகானிலோர்மரத்திருக்க
சிங்கித்திற்கஞ்சிகரடியவ்வேந்தனைச் சேர்த்துமத்தருவிலேற்றிடவே (145)
மன்னன்கரடியைச்சிங்கமுன்றள்ளிய மாபாதகமதுதீருதற்கே
சஃ.னதிக்கங்கைதனிற்படிந்துராம சாமியின்பாதத்தைப்போற்றியதால்(146)
பாதகந்தீர்ந்துபரிசுத்தனாகித்தன் பட்டணஞ்சேர்ந்துசெங்கோலடைந்து
பூதலப்போற்றமகிழ்ந்தனனுமிந்தப் புண்யசேதுவைப்புகழ்ந்தனனும் (147)
தவத்திற்சிறந்தபராவசுவென்பவன் றந்தையைக்கொன்றபவம்போக்க
சிவத்தைநினைந்துமறையோர்புகழ்ந்திடுஞ் சேதுராமீசுரனைப்பணிந்து (1.48)
வேண்டுங்கருணையடைந்துதந்தைக்குயர் வேவிடவேவரம்வாங்கினனும்
மீண்டுந்தன்மானகர்வந்துகீர்த்தியொடு விண்ணவரேற்றிடவாழ்ந்தனனே ()
துர்வினியென்னுமோர்விப்ரச்சேயன் வந்துதுர்ப்புத்தியாலன்னைவாகினியைப்
பர்வமதனிலெண்ணமலணைந்திட்ட பாதகன்னீங்கிடவேநினைந்து (150)

கங்கையில்மூழ்கியிச்சேதுவில்மேவிடுங் கண்ணுதற்பெம்மான்றனைத்துதித்து
சங்கையிலாதபவங்களகன்றவன் சந்தோஷமாய்ப்பதியெய்தினனே (151)

(சேதுமாதவர்)

கூடற்கரசனுஞ்சங்கரபாண்டியன் கோதையொடுதனுக்கோடியதில்
ஆடல்செய்துபரந்தாமனைநோக்கி யன்புடன்யாகமியற்றிடவே (152)

ஏந்தலைச்சோதிக்கச்செந்திருமாமகள் எட்டுவயதுள்ளபெண்வடிவாய்
காந்தியொடுவரக்கூடற்கரசனுங் கண்டழைததுத்தன்புதல்வியைப்போல் ()

அற்புதமாகவளர்ந்துவருகையில் ஆழியிற்றுஞ்சியநாரணனும்
கற்புமிகுந்ததன்றேவியைக்கண்டிடக் கண்ணுதற்பெம்மானடியவர்போல் (154)

பூதிபோடக்குமணிபுனைந்துகங்கைப் புண்ணியக்காவடிதோணணிந்து
வேதியனைப்போலச்சேதுப்பதியினில் விளங்கிடும்நந்தவனம்புகுந்து (155)

தேமலர்க்கொய்திடும்மாமகளைப்பற்றிச் செந்திருமால்வன்றுனிமுக்க
கோமகன்சங்கரபாண்டியன்றன்னிடம் கூவியுரைத்தனர்தோழியரும் (156)

அந்தமொழிமன்னன்கேட்டிடவேயவ னங்கமதைவயேவாட்டிடவே
சொந்தமாய்த்தண்டவீரரொடுவந்து துட்டப்பிராமணனைப்பிடித்து (157)

செவ்வையதாகப்புடைத்துவிலங்கிட்டு சீக்கிரத்திற்சிறைசெய்யுமென
அவ்வீரர்வேந்தனுரைப்படியேகோவி லார்ந்தவரையினிலிட்டனரே (158)

பூமகளோடுபொருந்தியகாரணன் புண்ணியப்பாண்டியன்றன்கனவில்
ஏமமதில்வந்துகாட்சிகொடுத்ததை ஏந்தலுங்கண்டுவிழித்தெழுந்து (159)

சங்கரபாண்டியன்பார்த்திடவுஞ்சிறை தன்னிலதுபோலத்தோற்றிடவும்
மங்கையும்லெட்சுமியாகவிருப்பதை மன்னனுங்கண்டுமிகப்பணிந்தான் (160)

மாதவன்மாமகளும்மகிழ்ந்துகூடல் மன்னவன்றன்னைமிகப்புகழ்ந்து
பூதலம்போற்றக்கருணைசுரந்திந்தப் புண்ணியசேதுவமர்ந்தனராம் (161)

இந்தமகிமையாற்சேதுமாதவனென் றேற்றிடுவாரெப்புவியோரும்
வந்துதனுக்கோடியாத்திரைசெய்தபின் மாமலர்கொண்டேனையேற்றுவரேல்()
காசியிலாடியதின்பலனும்சேதுக் கங்கையில்மூழ்கியதின்பலனும்
மாசின்றிநாமேவழங்கிடுவோமென மாமகள்கேள்வன்மொழிந்தனனே (163)
அந்தப்படிசேதுயாத்திரைசெய்பு மனைவர்களுஞ்சேதுமாதவனின்
கந்தமலர்க்கழல்போற்றிப்பலன்பெருங் காட்சியைப்பாருங்கள்நங்கையரே ()
நங்கையரேயினிவாருங்கடிசேது ராமலிங்கம்சேவைபாருங்கடி
சங்கையணிந்திடுஞ்சேதுமாதவனின் தாமரைப்பாதம்முதற்றுதித்தோம்(165)
முத்தியளித்திடுமீசனருளிய முக்கணன் சத்திக்கணபதியை
சித்தியளித்திடவித்தருணத்தினிற் சிந்தித்துக்கொம்மியடியுங்கடி (166)
நந்தியினன்னுமங்கூறுங்கடிராம நாதன்றனையெதிர்பாருங்கடி
துந்துபிமேளம்முழங்குவதும்சோதிச் சூடத்தீபங்கள்விளங்குவதும் (167)

அந்தணர்கள்வேதம்பாடுவதும் நடை அன்னமின்னார்நடமாடுவதும்
சுந்தரமாதவர்போற்றுவதும்லிங்கஞ் சோதிமயமாகத்தோற்றுவதும் (168)

பார்ப்பவர்பாவம்பறப்புதையும் அன்பர் பக்தியாய்ப்போற்றிச்சிறப்பதையும்
கோர்த்தமலர்க்குழல்மங்கையமேரகண்டு கும்பிட்டுக்கும்மியடியுங்கடி (169)

ஆதியும் அந்தமுமானதெய்வம்துதி யன்பர்தமக்கருள்செய்யுந்தெய்வம்
மேதினியும்விண்ணுமானதெய்வம்ராமன் வேண்டும்வரங்களளித்ததெய்வம் ()

பிர்மகத்திப்பவம்மாற்றுந்தெய்வம் மறைபிர்மாதிதேவரும்போற்றுந்தெய்வம்
கர்மவினைகளையாற்றுந்தெய்வம் இந்தக்காசினியோர்புகழ்ந்தேற்றுந்தெய்வம்

சேதுராமீசனுமானதெய்வம் எந்தன் சிந்தைப்படியருள்செய்ததெய்வம்
மாதுபருவதவர்த்தனியோடிங்கு மங்களமோடுவிளங்குந்தெய்வம் (172)

தன்னைத்துதிமிக்கக்கூறுங்கடிபிர தட்சிணம்செய்குவோம்வாருங்கடி
முன்னேமுளைத்ததோர் அத்தரபூர்வரும் முத்தியளிக்குமகாதேவரும் (173)

சிந்தித்தவர்க்கருள் தன்னைத்தினந்தருந் தெக்ஷிணாமூர்த்தியிலங்குவதும்
மந்தரத்திண்புயமாருதியுங்கொண்டு வந்தவிஸ்வேசன்விசாலாட்சியும் (174)
நன்மையதாகவிளங்குவதும் அங்கு நான்குவேதமுமுழங்குவதும்
பன்னகமும்புலிப்பாதனுன்னுடிய பாண்டரங்கன்றில்லைத்தாண்டவனும்(175)
வானவர்தங்களிடுக்கணியற்றியும் வானுலகத்தினிலேநிறைந்த
தானவர்தங்கள்குலமறுத்தசிவ சண்முகன்றன்னையும்பாருங்கடி (176)
மல்கும்பலமலர்கொண்டுவணங்கியே வாழ்த்திக்கொன்றைமலரணியுஞ்
செல்விபருவதவர்த்தனியாலயம் சென்றிடுவோம்வாரும் நங்கையரே (177)
தங்கக்கொடிமரம்தோணுவதும் அங்கு சார்ந்திருக்கும்நந்திகாணுவதும்
மங்கையரேயம்மைபாதமலரினை வணங்கிக்கும்மியடியுங்கடி (178)
அந்தணர்கள்பூஜைசெய்வதையும்விண் ணமர்ந்தனர்பூமழைபெய்வதையும்
சுந்தரமங்கையராடுவதும் அந்தத் துய்யநர்க்கீதங்கள்பாடுவதும் (179)

சங்கீதங்கள்மிகப்பாடுவதும் பக்தர் சந்தோஷமாகநின்றாடுவதும்
மங்கையரெல்லோருமம்மையின்பாதத்தை வணங்கிக்கும்மியடியுங்கடி (180)
சண்டேச்வரியினைப்போற்றுங்கடி யவர் தாள்மலரைப்பணிந்தேற்றுங்கடி
சண்டமாருதியளித்தவனுமானைச் சார்ந்துகொம்மியடியுங்கடி (181)
மின்னொளிபோலவும்பொன்மயமாகவும் விளங்கிடும்வாகனத்தின்சிறப்பும்
நன்னயமானபடத்தோடக்குமணி நாதம்முழங்கும் வலம்புரியும் (182)
முத்துப்பவழமும்சோவிமஞ்சப்பொட்டி மோகமின்னாரணிசிந்தூரமும்
நத்துப்புலாக்குடன்நானாவிதம்விர்க்கும் நாகரீகக்கடைபாருங்கடி (183)
சித்தப்படியெல்லாங்கொள்ளுங்கடி இந்தச்சேதுராமன்னுமெய்விள்ளுங்கடி
முத்தலம்போற்றிடும்மித்தலம்வாழ்த்திட முழங்கிக்கும்மியடியுங்கடி (184)
சேதுராமீசன்பதம்வாழிநித்தம் சிந்தித்தவர்க்கருளைக்கொடுக்கும்
மாதுபருவதவர்த்தனிச்செஞ்சரண் வாழிமறைகணிதம்வாழி (185)

வேழமுகனும்குகன்வாழிநான்கு வேதமறையோர்கிதம்வாழி
ஆழத்திரையிற்றுயின்றவனுமெங்கள் அய்யன்சேதுமாதவன்வாழி (186)
செந்திருமாதோடயன்வாழி கலைத்தேவிகமலப்பதம்வாழி
அந்தரம்வாழிபுவிவாழிதமி ழையன்பொதிகைமுனிவாழி (187)
ராமனும்லெட்சுமணன்வாழிதிரு நங்கைசீதாதேவியும்வாழி
தாமனுமாஞ்சனேயன்வாழிவீர சாம்புவன் சுக்ரீவனும்வாழி (188)
தென்முகவையாளும்முத்துராமலிங்கச் சேதுபதியும்செங்கோல்வாழி
நன்னயமாயிதைப்பாடுவோர்புத்திரர் நற்செல்வத்தோடென்றும் வாழியவே.

(மங்களம்)

மங்களம் மறைபுகழும்ராமனுதேச்சுரர்க்கு
மங்களம் திருஞானசம்பந்தர்க்கு
மங்களம் வாகீசவரதராரூரருக்கு
மங்களம் மாணிக்கவாசகர்க்கு.

(செயமங்களம் நித்திய சுபமங்களம்)

உ

ஓம் கணபதி துணை.

ஸ்ரீமத் துத்தர ஆதிசிதம்பரகைலாசமெனும் திருவுத்தரகோசமங்கையில்
எழுந்தருளியிராநின்ற ஸ்ரீ ஆதிசிதம்பரேச்வரர்பேரிற்
ஸ்ரீமாணிக்கவாசகஸ்வாமிகளால் பாடப்பெற்ற

# சிவஞானபோதம்.

திருச்சிற்றம்பலம்.

(விருத்தம்)

கங்கையும் பிறையும் தும்பையும் அறுகும் கடுக்கையும் எருக்கணிச்சடையும்
கணபணுடவி நீளுரக்கங்கணமும் காதினிற்கவசகுண்டலமும்
செங்கையும்மானும் மழுவுமேதரித்துச் சிரமொடுசூலமுமேந்தி
செக்கர்வான்மேனித் தவளநீரணிந்து செம்புலியுரியுடையுடுத்தி
மங்கையோர்பாகம் தன்னிலேவைத்து மதியுறுவெள்விடையேறி

மலரடி தன்னிற் சிலம்பொலியார்ப்ப வந்தெனையாண்டருளிதயம்
தங்கிருந்தனும் மம்பலத்தரசே யமரர்கள்தேடியுங்காணு
அதிசயவடிவே சதுர்மறைப்பொருளே அய்யனே ஞானதேசிகனே. (1)

ஓம் துணை.

ஓமெனுமூலாதாரமேகணபதி யுதித்திடும்வல்லபைசத்தி
உயர்ந்திடும்சுவாதிஷ்டானமேபிரமன் ஓங்கொளிநாமகள்சத்தி
வாமமாமணிபூரகத்தினில் விஷ்ணுமருவளர் திருவெனுஞ்சத்ன்
வளரனாகதத்தி லுருத்திரனுருத்திரி மயேச்சுரன் மயேச்சுரி விசுத்தி
தாமமாக்கினையில் சிவன்மனோன்மணியுந் தற்பரன் தற்பரையுடனே
தயவதாய்த்துவாத சாந்தமேமுதலாய்த் தமியனுக்கிதுவெலாந்தெரிய
தாமெனவருளுமம்பலத்தரசே யமரர்கள்தேடியுங்காணு
அதிசயவடிவே சதுர்மறைப்பொருளே அய்யனே ஞானதேசிகனே. (2)

நித்தமுஞ்சுழினை வழிமனஞ்செலுத்தி ரேசகமாதியாயறிந்து
நியமமாம்ப்ராணாயாமதாரக நன்னிலைமிந்து கலைகளைவிரும்பி
தத்துவந்தொண்ணூற்றாறையுந்தெரிந்து சாக்கிரமென்பதுமோர்ந்து
ஸதாசிவமுதலாயருவரைப்பணிந்து தற்பறையிணையடியிறைஞ்சி
புத்தமுதூரல்தன்னையேயருந்திப் பூரணானந்தமேயுணர்ந்து
புதுமையாமுனது சுவானுபோகத்திற் பொருந்தவேநின்பதமருள்வாய்
அத்தனேகனக அம்பலத்தரசே யமசர்கடேடியுங்காணா
அதிசயவடிவே சதுர்மறைப்பொருளே அய்யனேஞான தேசிகனே (3)

தேகமாஞ்சோங்குபாய்மரப்பொறிகள் சீனியாங்கரணமேவினைகள்
திகழ்ந்திடுஞ்சரக்குச்சீவனாம்வணிகன் சிறந்திடுஞ்சாக்ஷிமீகாமன்
மோகமாங்கடலில்புலன்வழியதனால் முயர்ச்சியாய்நடந்திடும்பொழுது
மும்மலச்சுழிக்காற்றாரத்தும்வந்தெடுத்து முடிகியேதூரமாம்பொழுது

சோகமேபுரிந்துசிவசிவாவென்று சொல்லிடஞானபோதகந்தான்
துணையெனநின்றுகரைதனிலேற்றிச் சுகம்பெறச்சொரூபமேயருளும்
ஆகமம்புகழும் அம்பலத்தரசே அமரர்கடேடியுங்காணு
அதிசயவடிவேசதுர்மறைப்பொருளே அய்யனேஞானதேசிகனே (4)

வாடியேதிரிந்துமனமதுதளர்ந்து மாய்கையின்கடலிடைபுகுந்து
வையகமெல்லாம்யானெனமதித்து மயங்கியேகொடும்பிணியதனால்
தேடியேகாலன்வலிமையதாகித் திறமுடன்வந்திடும்பொழுது
தேகமுமோய்ந்துயோகமுமிழந்து தியங்கியேதிரிந்துழலாமல்
நீடியஞானச்செழுஞ்சுடரான நின்மலாகாசமாயடியேன்
நினைவுநின்னினைவாய்ச்சச்சிதானந்த நிலைமையைப்பெறவருள்புரிவாய்
ஆடியகனக அம்பலத்தரசே அமரர்கள்தேடியுங்காணு
அதிசயவடிவே சதுர்மறைப்பொருளே அய்யனே ஞானதேசிகனே (5)

இச்சையேயிருந்துபொறிவழிசுழன்று இலங்கியகரணகோசத்தால்
இயம்புறுபுலன்கள் அதனதன்வழியே யேடணைமூன்றிலேமயங்கி.
பச்சையூடெழுந்தலெச்சையிலழுந்தி பரிவிலாதவத்தை யான்முயன்று
மதனுமும்மலச்சேறதனுளேயழுந்தி மனந்தவித்துழன்றிடாவண்ணம்
சச்சிதானந்தச்சொரூபமேயுணர்ந்து தயவுடன்ஞானசாம்பிராஜ்யம்
தானரசாள அருளெனுஞ்செங்கோல் தமியனுக்கின்றுநீதருவாய்
அச்சராசரனே அம்பலத்தரசே அமரர்கள்தேடியுங்காணு
அதிசயவடிவே சதுமாமறைப்பொருளே அய்யனே ஞானதேசிகனே. (6)

சுகமெனுந்துரியாதீதமேயடையத் துரியமாமுள்மனைபுகுந்து
சுழுத்தியாமெனுமோரிருட்டறைதிறந்து சொற்பனவிலாசமுங்கடந்து
இகமெனவிளங்குஞ்சாக்கிரத்திருந்தே யிந்தியபுலன்கரணங்கள்
இயல்புறுகாலே சுத்தவித்தைகளோடேடணைக்குணங்கள்வாக்காதி

மகவுறுபூதகாரியநாடி வாயுதொண்ணூற்றுடனாறும்
வகைதனைத்தெரிந்துசொரூபமேயுணர்ந்துன் மலர்ப்பதம்பணியவேயருள்வாய்
அகமகிழ்கனக அம்பலத்தரசே அமரர்கள்தேடியுங்காணா
அதிசயவடிவே சதுர்மறைப்பொருளே அய்யனே ஞானதேசிகனே (7)

கருணையாலுலகிலுருவதாயடியேன் கண்ணெதிர்தோன்றியேயடியேன்
கசடெலாமகற்றித்தத்துவமசியாங் கதியுறுமிலக்ஷியார்த்தத்தின்
பொருள்முடிவதனையுணர்த்தியேயினது பூரணசுகசொரூபத்தைப்
பொருந்தவேமௌனமந்திரமான போதனையதனினாற்செழித்த
வருணனேயமிர்தமழையெனப்பொழியும் மகிழ்வுறுநன்னிலையதனில்
வஸ்துவேநின்னைக்கலந்ததுவாகும் வாழ்வெனக்கருள்செயுஞான
அருணனேகனக அம்பலத்தரசே அமரர்கள்தேடியுங்காணா
அதிசயவடிவே சதுர்மறைப்பொருளே அய்யனே ஞானதேசிகனே (8)

விந்துவினிடமாயவயவமமைத்து மெய்யெனப்பெயரதுதரித்து
வேற்றுமையாகக்குலம்பலவிதித்து வினையடிபோகமும் விளைத்து•
சிந்தையின்வசமாய்மைதுனமுறக்கந் தீவிறமூன்றையுமுணர்த்தி
ஜெகமெலாமிதனல்மயங்கியேதிரிந்து சீவனுந்தேகியாய்ச்சுழல
இந்திரஜாலமிதுவலாதுளதோ யிப்படியுனதுமாயத்தை
எவர்களாலகடக்கவசமதோநாளும் மெளியனுக்குன்பதந்தருவாய்
அந்தமுமிலாத அம்பலத்தரசே அமரர்கள்தேடியுங்காணா
அதிசயவடிவே சதுர்மறைப்பொருளே அய்யனே ஞானதேசிகனே (9)

கருசாணுந்தியச்செனுங்கரண மிரதமேவடிவுதாகாதி
இயற்றிடும்பதுமை இடக்கையாங்கரங்களெழிம்முடிதலையலங்காரம்
மருவியபொறிகள்வாசலாம்புலன்கள் வருபரிசாரகாரிகையாம்
மண்டபந்தன்னில்சிற்பரைதன்னை மணம்புணர்ந்தருள்வதேசேனை

கருவிகள்யோகவடந்தனைப்பூட்டிக்கடுஞ்சக வீதியிநடத்தும்
காரணமெவரால்த்தெரியுமோ உனது கடாக்ஷமேயடியனுக்கருள்வாய்
அரியயர்பரவும் அம்பலத்தரசே அமரர்கடேடியுங்காணா
அதிசயவடிவே சதுர்மறைப்பொருளே அய்யனே ஞானதேசிகனே (10)
என்பொடுநரம்பு தோலுடனிரத்தம் இரச்சியுமூளையு நிணமும்
வன்பொடுகுரம்பை தன்னையேவகுத்து வல்பிணிக்கதையினால் வாட்டி
மயலெனுங் கொடியதவ கிரிபூட்டி மானிடச்சட்டையே போர்த்து
துன்பமேயலாமல் சுகமதுகாணேன் சுகமதை யடைந்திடமாயந்
தொலையவேயதீதச் சொரூபமே யுணர்த்தி சுகம்பெரக் கருணையே தருவாய்
அன்பனே யெந்தை அம்பலத்தரசே அமரர்க டேடியுங் காணா
அதிசய வடிவே சதுர்மறைப் பொருளே அய்யனே ஞானதேசிகனே. (11)

சத்தமாம்பேரிதன்னையேமுழக்கி டமீரெனும்படிகலைபரப்பி
சரமெனுமேகாக்ஷரத்தையேதொடுத்து சபைமுதல்த்தலங்களாலடர்த்து
மத்தவாரணமாஞ்சிரவணம்நடத்தி மன்னமாம்புரவியால்விளைத்து
மணிநெடுந்தேராம்நித்தியாசனத்தால் மனுவலர்முடிகள்பந்தாடி
நித்தியாநந்தசுகாசனத்திருந்து நிருபனும் ஞானசாம்ராஜ்ஜியம்
நிஜானந்தமான அருளெனுஞ்செங்கோல் நிலைதனையடியனுக்கருள்வாய்
அத்தனேகனக அம்பலத்தரசே அமரர்கள்தேடியுங்காணு
அதிசயவடிவே சதுர்மறைப்பொருளே அய்யனே ஞானதேசிகனே. (12)

சிவஞானபோதம் முற்றிற்று.